யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

திக்கம் அல்வாய்.

வருடாந்த பரிசளிப்பு விழா

# -2016-

## வருடாந்த அறிக்கை

நிகழ்வுகளின் வரிசையில்....

1. விருந்தினரை வரவேற்றல்
2. மங்கள விளக்கேற்றல்
3. இறைவணக்கம்
4. தமிழ்மொழி வாழ்த்து
5. வரவேற்புரை
6. வருடாந்த அறிக்கை
7. தலைமையுரை
8. சிறப்பு விருந்தினர் உரை
9. பிரதம விருந்தினர் உரை
10. பரிசில் வழங்கல்
11. கலை நிகழ்வுகள்
12. நன்றியுரை
13. பாடசாலைக்கீதம்

யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

திக்கம் அல்வாய்.

# வருடாந்த பரிசளிப்பு விழா -2016

காலம் :- 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- மு.ப.9.30 மணி

இடம் :- பாடசாலை வளாகம்

தலைவர்

❖ **திரு.கந்தசாமி ரவீந்திரன்**

(அதிபர்)

பிரதம விருந்தினர்

❖ **கௌரவ திரு.சி.அகிலதாஸ்**

(வடக்கு மாகாணசபை உறுப்பினர்

வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

❖ **திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன்**

(ஓய்வு நிலை பிரதி அதிபர்- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறை.)
இப்பாடசாலையின் பழைய மாணவி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# மகுட வாசகம்

## கல்வி அழகே அழகு

## தூரநோக்கு

ஆரம்பக் கல்விப் பருவத்தில் அடைய வேண்டிய தகைமைத்திறன்களை விசேட நிலையில் பெற்று எல்லா மாணவரும் பண்புசார் கல்வியை அடைதல்.

## நோக்கக்கூற்று

எமக்குக் கிடைக்கக்கூடிய தரமான வளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து தகைமைத்திறனை விருத்தி செய்யும் மாணவர்களை மையப்படுத்திய கல்விச் செயற்பாடுகள் மூலம் சகல மாணவரும் பண்புசார் கல்வியைப் பெற்றுக்கொள்ளச் செய்தல்.

யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்

திக்கம், அல்வாய்.

# வருடாந்த அறிக்கை -2016

வடமராட்சிக் கல்வி வலயத்தில் சிறந்த ஆரம்பக்கல்வியை வழங்கி வருகின்ற எமது பாடசாலை வருடாந்தம் மாணவரது கல்விச் செயற்பாடு மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஊக்கத்தை அதிகரிக்கும் முகமாக அவர்களுக்கு பரிசில்களை வழங்கி ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருின்றது. அந்த வகையில் இன்றைய தினம் இப்பரிசளிப்பு விழாவினை நடாத்தி மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி உற்சாகப்படுத்தும் இந் நிகழ்விற்குரிய நிதியினை அமரர் இராமலிங்கம் துரைராசா வயிராத்தைப்பிள்ளை ஞாபகாரர்த்த நிதியத்தியத்தின் அனுசரணையுடன் நடாத்திக் கொண்டிருக்கின்றோம். எனவே முதற்கண் இந்நிதியத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்து பாடசாலையின் பிரார்த்தனை மண்டபமாகவும் பரிசளிப்பு நிழ்வுக்குரிய அரங்காகவும் திகழும் இவ் அரங்கினை அமைப்பதற்குரிய நிதியுதவியை வழங்கிய திரு. து. ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா ஆகியோர் சென்ற ஆண்டில் இவ்மண்டபத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக நிதி வழங்கி வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வேலைகள் யாவும் இன்று பூர்த்தியடைந்த நிலையில் இம் மண்டபம் மிக அழகாக காட்சியளிக்கின்றது. இவ்வரங்கு அமைப்பதற்காக அவர்கள் மொத்தமாக 725000 ரூபா நிதியினை கடந்த மூன்று வருடங்களில் செலவு செய்துள்ளனர். மேலும் இப்பரிசளிப்பு நிதியத்தினை உருவாக்கி பரிசளிப்பு விழாவினை செயற்படுத்திக் கொண்டும் இருக்கின்றனர். எனவே அவர்கள் இருவருக்கும் எமது மனமாாந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து எமது பாடசாலையின் மாணவர்கள் எண்ணிக்கை வருடாந்தம் அதிரித்துக் கொண்டு செல்வதால் பாடசாலையின் வகுப்பறைகளின் இட நெருக்கடி காரணமாக புதிய கட்டடங்களை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இக்கட்டடங்களை அமைப்பதற்கு பாடசாலையின் காணி போதுமானதாக இல்லை எனவே காணி கொள்வனவு செய்ய வேண்டிய தேவையினை கடந்த ஆண்டுகளில் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். ஆனால் காணியினைக் கொள்வனவு செய்ய முடியவில்லை. இருப்பினும் இந்த ஆண்டில் பாடசாலையின் பின் புறம் அமைந்த ஒரு பரப்புக் காணியினை

திரு.திருமதி ஸ்ரீரங்கன் இந்திராணி தம்பதியினர் மனமுவந்து பாடசாலையின் அபிவிருத்தி கருதி நன்கொடையாக வழங்கியிருக்கின்றார்கள். இத் தம்பதியினரை நாம் இன்று கௌரவிக்கும் முகமாக விருந்தினர்களாக அழைத்திருக்கின்றோம். இந் நிகழ்வில் கௌரவிக்க உள்ளோம். அவர்களுக்கு பாடசாலை சார்பாக மனமார்ந் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நோய் நொடியின்றி பல்லாண்டு வாழவும் வாழ்த்துகின்றோம்.

அடுத்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக தொழிலதிபர் திரு. ந. பாஸ்கரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வருடாந்தம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்ளுக்கு பரிசுத் தொகையினை வழங்கி வருகின்றது. மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்கள் 12 பேருக்கு மாதாந்தம் தலா 100/= வீதம் வங்கியில் வைப்பு செய்யப்படுகிறது. இவ் இரு நிதிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடத்தில் பாடசாலைகளின் திருத்த வேலைகளின் பொருட்டு அரசின் “அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” (NSBS) செயற்திட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்கும் ரூபாய் 280000/- நிதி ஒதுக்கப்பட்டது. ஆதன் பொருட்டு நாம் பாடசாலையின் மூன்று கட்டடங்ளுக்கும் 60x25, 40x25,40x20 வர்ணம் பூசுதல் 60x25, 40x20 கட்டடங்களுக்கு Balance board அடித்து மழைநீர் வடிந்தோடும் பீலி பொருத்துதல் பிரார்த்தனை மண்டபத்தில் நிலப்பகுதிக்கு சீமெந்து பூச்சிடல் 40x20 கட்டடத்திற்கு படி அமைத்தல் போன்ற வேலைகளைச் செய்துள்ளோம். இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 30% ஆன 84000/- ரூபாவே இதுவரை கிடைத்துள்ளது. மீதி நிதி இன்னும் கிடைக்கவில்லை. இவ் NSBS செயற்திட்டத்திற்கான நிதியினை ஒதுக்கிய வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் வலயக்கல்வி அலுவலகத்தினருக்கும் மனமார்ந் நன்றிகளைத் தெரிவித்துக் கொளின்றோம்.

அடுத்து பாடசாலைக்கு 70x30 மேல்மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காகவும் நாம் வலயக்கல்வி அலுவலகத்தைக் கோரியிருந்தோம் அதற்கும் அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் செய்து தருவதாக உறுதியளித்திருக்கின்றனர். அக்கட்டடம் அமையப் பெற்றால் எமது வகுப்பறைகளின் இடநெருக்கடி குறைக்கப்படுவதுடன் செயற்பாட்டறை நூலகப் பயன்பாடு கணனிப் பயன்பாடு என்பவற்றையும் விரிவுபடுத்தி மாணவர் கற்றலை மேம்படுத்த முடியும். மேலும் நாம் பாடசாலைக்கு வடக்குப் பக்கம்

உள்ள காணியை பாடசாலைக்கு கொள்வனவு செய்வதற்காக பழைய மாணவர் சங்கம் மூலம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இம் முயற்சி வெற்றி பெற்றால் மாணவர்களுக்கான காலை உடற்பயிற்சி செய்வதற்குரிய மைதானம் கிடைப்பதுடன் நாம் கோரியிருக்கும் கட்டடத்தின் நீளத்தை இன்னும் அதிகரிக்கவும் முடியும். எதிர்காலத்தில் சகல வளங்களும் கொண்ட ஓர் ஆரம்பப் பாடசாலையாக இவ் வித்தியாலயம் திகழ வாய்ப்புள்ளது.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மிகச் சிறப்பாக திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அமரர் இராமலிங்கம் சச்சிதானந்தம் பார்வதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையில் வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கணக்காளர் திருமதி மேரிவத்சலா மோகனச் செல்வன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி சித்திரகலா வித்தியாபதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டிய வெற்றி வீராங்கனைகளுக்கான பதக்கங்களை எமது பாடசாலையின் பழைய மாணவனும் வடமராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருமான திரு.இ.இராஜசீலன் அவர்கள் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கி சிறப்பித்திருந்தார். அவருக்கும் எமது பாடசாலை சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்காக வறிய மாணவர்களின் கல்விக்கு உதவும் வகையில் இருபத்தைந்து மாணவர்களுக்கு தவணைக்கு 200 ரூபாய் வீதம் கொடுப்டபனவு ஒன்றைச் செய்து வருகின்றது லாவண்யா நிதியம் . இந்நிதியத்திற்காக நிதி வழங்கும் திரு ந. விஜயசிங்கம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே போல் மாணவர்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற் கொள்ளும் திரு யோ.குகானந்தன் அவர்களுக்கும் இந்நிதியைப் பெற்று நீர் விநியோகத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் அவரது சகோதரி திருமதி சதாகரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து பாடசாலைச் சுத்திகரிப்பு வேலைகளுக்காக கூலியாளுக்கான கொடுப்பனவை வழங்கிக் கொண்டிருக்கும் திரு.திருமதி த. விஜயகுமார் பிறேமினி (த.விதுசா தரம் 3)அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியில் கிறிஸ்தவம் (றோ.க) பாடத்தை கற்பிப்பதற்கு உதவி புரியும் கிறிஸ்தவ சமய பெற்றோருக்கும், ELRTC ஆங்கில வகுப்பை நடாத்துவதற்கு உதவிபுரியும் ELRTC மாணவர்களது பெற்றோருக்கும், பாடசாலையின் உணவு வழங்கல்

செயற்பாட்டிற்கு உதவி புரியும் உலக உணவுத் திட்டத்தினருக்கும் (WFP) மற்றும் இலங்கை அரசினருக்கும் உணவுத் திட்டத்தை மேன்மேலும் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு உதவி புரியும் "ஒரு பானை" நிறுவனத்தினருக்கும் பாடசாலையின் சகல செயற்பாடுகளுக்கும் உதவியளித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## 1. மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத் |
|---|---|---|---|
| 1 | 16 | 22 | 38 |
| 2 | 17 | 16 | 33 |
| 3 | 13 | 09 | 22 |
| 4 | 11 | 27 | 38 |
| 5 | 17 | 11 | 28 |
| | 74 | 85 | 159 |

## 2. ஆசிரியர் ஆளணி விபரம்

அதிபர் :- திரு.கந்தசாமி ரவீந்திரன்
(B.ED,Primary Trained, SLPS III)

ஆசிரியர்கள்

1. திருமதி. தவறஞ்சினி பிரபாகரன்
   (B.B.A.Dip.in.Edu,SLTS 2-II)
2. திருமதி.யாழினி மதியழகன்
   (NCOE Dip Holders, SLTS-2-II)
3. திருமதி. மாலாவதி செல்வானந்தன்
   (Primary Trained, SLTS 2-II)
4. திரு.பொன்னுத்தம்பி கேதீஸ்வரன்
   (B.A(Econ)Hons.Dip-in-Education SLTS-2-I)

5. திரு.ஆறுமுகம் கணநாதன்
(Primary Trained, SLTS -I)
6. திருமதி.சுமதி குகதாசன்
(B.A.Dip.in.Edu,SLTS 2-I)
7. திருமதி.மேகலா பராக்கிரமன்
(B.A.Dip.in.Edu,SLTS 2-II )

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்

1. திரு.இரவீந்திரராசா பிரதீபன்
(HND in English)

தொண்டர் ஆசிரியர்கள்

1. செல்வி.வில்வராசா ஆன்கனிஸ்ரா
(றோ.கத்தோலிக்கம்)
2. செல்வி. தங்கவேலாயுதம் தர்ஷிகா
(கணினி)

**ELRTC ENGLISH**

1. செல்வி. அன்னலிங்கம் ஜெயந்தா

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக நடாத்தப்பட்டு வருகின்ற சகல போட்டி நிகழ்வுகளிலும் எமது மாணவர்களும் பங்கு பற்றியுள்ளனர் இடங்களையும் பெற்றுள்ளனர். நிகழ்வுகளில் பெற்ற இடங்கள் வருமாறு.

## கோட்டமட்டப் போட்டிகள்

| இல | | போட்டி | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | பெற்ற இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | கோட்ட மட்டம் | தமிழ்த்தினப் போட்டி | ஆக்கம் எழுத்து | அ.வினுஜா | 3ம் இடம் |
| 2 | வலய மட்டம் | தமிழ்த்தினப் போட்டி | ஆக்கம் எழுத்து | அ.வினுஜா | 3ம் இடம் |
| 3. | மாவட்ட மட்டம் | கத்தோலிக்கத் தேர்வு | எழுத்துப் பரீட்சை | எ.மேரிதிபானி | 3ம் இடம் |
| 4. | வலய மட்டம் | ஆங்கிலதினப்போட்டி | Action Song(4,5) | குழு | 1ம் இடம் |
| | | | Action Song(1,2) | குழு | 3ம் இடம் |

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2016

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு இவ்வாண்டில் எமது பாடசாலையில் இருந்து 24 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.இவர்களில் இரண்டு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலாகப் பெற்றுள்ளனர். (சித்தி வீதம் - 8. 3%) 100புள்ளிகளுக்கு மேல் 15 மாணவர்கள் பெற்றுள்ளனர் (62.5%)இவ்வாண்டு மாகாணக்கல்வித் திணைக்களம் சகல மாணவர்களையும் 70புள்ளிக்கு மேல் பெறச் செய்தல் வேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருந்தது. அதற்கமைய செயற்பட்ட நாம் 24 மாணவர்களில் 22 மாணவர்களை 70 புள்ளிகளுக்கு மேல் பெறச் செய்துள்ளோம். (தேர்ச்சி வீதம் 91.6%) சென்ற ஆண்டில் 70 புள்ளிக்கு மேல் தேர்ச்சி வீதம் 87.5% இருந்தது. இம்முறை 70 புள்ளிகளுக்கு மேல் தேர்ச்சி வீதம் 91.6% ஆகவும் அமைந்து தேர்ச்சி வீதத்தில் அதிகரிப்பைக் காட்டியிருக்கின்றது.மேலும் இப்பாடசாலையின் அதிகூடிய புள்ளி என்ற வகையில் இவ்வாண்டில் முன்னைய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் சென்ற ஆண்டில் செ.ரோசியா 174 புள்ளியைப் பெற்றிருந்தார். இச்சாதனையை இவ்வருடம் ம.இனியா 175 புள்ளிகளைப் பெற்று உயர் புள்ளிச் சாதனையை நிலை நாட்டியுள்ளார். இப்பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல்

பெற்ற இரு மாணவர்களையும் 70 புள்ளிக்கு மேல் பெற்ற 22 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோருக்கும் வழிகாட்டிய வகுப்பாசிரியர் திரு.பொ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கடந்த 5 ஆண்டுகளில் புலமை பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | வெட்டுப் புள்ளி | தோற்றியோர் தொகை | சித்தி பெற்ற தொகை | சித்தி வீதம் | 70புள் மேல் பெற்ற தொகை | வீதம் | எமது பாடசாலையில் அதிகூடிய புள்ளிகள் | எமது பாடசாலையில் அதிகுறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 148 | 08 | 01 | 12.5% | 07 | 87.5% | 173 | 062 |
| 2013 | 154 | 18 | 03 | 16.7% | 15 | 83.3% | 159 | 061 |
| 2014 | 150 | 20 | 02 | 10% | 18 | 90% | 164 | 037 |
| 2015 | 153 | 24 | 06 | 25% | 21 | 87.5% | 174 | 061 |
| 2016 | 152 | 24 | 02 | 8.3% | 22 | 91.6% | 175 | 052 |

## 2016 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்

| தோற்றியோர் | சித்தி பெற்ற தொகை | மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 24 | 02 | ம.இனியா<br>அ.வினுஜா | 175<br>154 |

## புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம் -13

1. ம.இலக்கியா– 146
2. ஸ்ரீ.துளசிகா – 145
3. ஜெ. பிருந்திகா – 142
4. ம.அரணி – 141
5. சி.விதுசன் - 137
6. ந.கீர்த்தனன் – 133
7. செ.நிலானி - 128
8. கி.கஜேந்திரன் -125
9. பு.அக்சயன் – 120
10. அ.ஜெஸ்ரின் - 120
11. வை.அபிசாரன் - 113
12. தே.ரவிச்சந்திரன் - 109
13. சா.சாருஜன் - 108

## நிறைவேற்ற வேண்டிய தேவைகள்

1. வகுப்பறைகள் விஸ்தீரணப்படுத்தல்.
2. நவீன கலையரங்குடன் கூடிய இருமாடிக் கட்டடம் ஒன்றை அமைத்தல்.
3. செயற்பாட்டறையுடன் கூடிய நூலகம் அமைத்தல்.
4. அதிபர் அலுவலகம் அமைத்தல்.
5. பாடசாலையினை விஸ்தரிக்கும் முகமாக காணியினை கொள்வனவு செய்தல்.
6. துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் அமைத்தல்.
7. நன்கொடையாகப் பெறப்பட்ட காணிக்கு மதில் அமைத்தல்.

# நவராத்திரி போட்டிகள் - 2016

| இல | தரம் | மாணவர் பெயர் | போட்டியும் இடங்களும் |
|---|---|---|---|
| 1. | 01 | ட.டனுஸ்ரிகா | கோலம் 1ம் இடம். |
| 2. | 01 | க.சிவானி | கோலம் 2ம் இடம். |
| 3. | 01 | ச.ஆராதனா | கோலம், பண்ணிசை 3ம் இடம், , எழுத்துப் பரீட்சை 1ம் இடம் |
| 4. | 01 | பெ.யோனிஷா | பேச்சு 1ம் இடம். |
| 5. | 01 | ம.அபிஷயா | பேச்சு 2ம் இடம். |
| 6. | 01 | மோ.ஹேசிகா | பேச்சு 3ம் இடம். |
| 7. | 01 | கி.கமிஷா | பண்ணிசை 1ம் இடம், எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 8. | 01 | ப.தாட்ஷாயினி | பண்ணிசை 2ம் இடம். |
| 9. | 01 | ச.பிரணவி | எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 10. | 02 | அ.அக்சனா | கோலம் 1ம் இடம். |
| 11. | 02 | ரா.ரதுமினா | கோலம் 2ம் இடம். |
| 12. | 02 | வை.அபிஷாளினி | கோலம் 3ம் இடம். |
| 13. | 02 | த.பவிஷா | பேச்சு, பண்ணிசை 1ம் இடம். |
| 14. | 02 | ச.தேவானந் | பேச்சு 2ம் இடம். |
| 15. | 02 | தெ.துஷாரா | பேச்சு 3ம் இடம், பண்ணிசை 2ம் இடம். |
| 16. | 02 | ஜெ.ஜெனோசன் | பண்ணிசை 3ம் இடம், எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 17. | 02 | சு.கோபிதரன் | எழுத்துப் பரீட்சை 1ம் இடம் |
| 18. | 02 | ச.அபிநயன் | எழுத்துப் பரீட்சை 3ம் இடம் |
| 19. | 03 | ஜெ.ஜென்சிகா | கோலம் 1ம் இடம், பேச்சு, தோரணம் கட்டுதல்2ம் இடம். |
| 20. | 03 | க.கௌசிகன் | கோலம் 2ம் இடம். |
| 21. | 03 | ம.திஷாளினி | கோலம் 3ம் இடம். |
| 22. | 03 | ப.தீபிக்கா | பேச்சு 1ம் இடம். |
| 23. | 03 | கோ.கௌரீசனன் | பேச்சு 3ம் இடம். தோரணம் கட்டுதல 1ம் இடம். |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| 24. | 03 | சி.ஹரிஸ்ராம் | எழுத்துப் பரீட்சை 1ம் இடம் பேச்சு 3ம் இடம். |
| 25. | 03 | செ.கார்த்திகன் | எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 26. | 03 | வி.விதுஷன் | எழுத்துப் பரீட்சை 3ம் இடம். |
| 27. | 03 | நி.சாரங்கன் | தோரணம் கட்டுதல் 31ம் இடம். |
| 28 | 04 | பி.ஆருஜா | கோலம் பண்ணிசை 1ம் இடம் எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 29. | 04 | கி.கம்ஷா | கோலம் 2ம் இடம் பண்ணிசை 3ம் இடம் |
| 30. | 04 | த.அபிஷா | கோலம் பண்ணிசை 3ம் இடம். |
| 31. | 04 | அ.சரோன் அபினா | கோலம் 3ம் இடம். |
| 32. | 04 | மு.ஹயானி | பேச்சு 1ம் இடம். எழுத்துப் பரீட்சை 3ம் இடம் |
| 33. | 04 | உ.அன்புவிழி | பேச்சு பண்ணிசை 2ம் இடம். எழுத்துப் பரீட்சை 1ம் இடம் |
| 34. | 04 | ர.அபிநயா | பேச்சு 3ம் இடம். |
| 35. | 04 | எ.மேரிதிபானி | பேச்சு 3ம் இடம். |
| 36. | 04 | வி.சதுர்ஜனா | மாலை கட்டுதல் 1ம் இடம். |
| 37. | 04 | கு.கோகுலன் | மாலை கட்டுதல் 2ம் இடம். |
| 38. | 04 | சி.சுலெக்ஷன் | மாலை கட்டுதல் 3ம் இடம். |
| 39. | 04 | உ.கொன்சிகா | மாலை கட்டுதல் 3ம் இடம். |
| 40. | 05 | பு.அக்சயன் | கோலம் 1ம் இடம் மாலை கட்டுதல் 3ம் இடம் |
| 41 | 05 | ந.கீர்த்தனன் | கோலம் 2ம் இடம். |
| 42. | 05 | ம.இனியா | கோலம் 3ம் இடம். பண்ணிசை 1ம் இடம் எழுத்துப் பரீட்சை 2ம் இடம். |
| 43. | 05 | ம.இலக்கியா | கோலம் 2ம் இடம். |
| 44. | 05 | ம.அரணி | பேச்சு எழுத்துப் பரீட்சை 1ம் இடம் |
| 45. | 05 | அ.வினுஜா | பேச்சு மாலை கட்டுதல் 2ம் இடம். |
| 46. | 05 | ஜெ.அபர்ணா | பேச்சு 3ம் இடம். |
| 47. | 05 | செ.நிலானி | புண்ணிசை 2ம்இடம் எழுத்துப்பரீட்சை 3ம் இடம் |
| 48. | 05 | அ.ஜெஸ்ரின் | மாலை கட்டுதல் 1ம்இடம். |

# பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2015

| இல | தரம் | மாணவர் பெயர் | பாடங்களும் நிலைகளும் |
|---|---|---|---|
| 1. | 01 | ரா.சுலோஜன் | சைவம் கணிதம் தமிழ் 1ம் இடம் சுற்றாடல் 2ம் இடம் |
| 2. | 01 | ச.தேவானந் | தமிழ் 1ம் இடம். |
| 3. | 01 | சா.ஹர்சிகா | தமிழ் கணிதம் 1ம் இடம் சைவம் 2ம் இடம் |
| 4 | 01 | ரா.ரதுமினா | கணிதம் 1ம் இடம் சுற்றாடல் 3ம் இடம் |
| 5 | 01 | சு.கோபிதரன் | சுற்றாடல் 1ம் இடம். |
| 6 | 01 | அ.அபிஷன் | சைவம் 3ம் இடம் |
| 7 | 01 | அ.அஜய் | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 8 | 01 | அ.அக்சனா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 9 | 01 | கு.ஜெனிலியா | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 10 | 01 | அ.வைஸ்ணவி | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 11 | 02 | றெ.றெஜீவன் | தமிழ் சுற்றாடல் 1ம் இடம் கத்தோலிக்கம் 2ம் இடம் கணிதம் 3ம் இடம் |
| 12 | 02 | சி.ஹரிஸ்ராம் | சைவம் 1ம் இடம் கணிதம் தமிழ் 2ம் இடம் சுற்றாடல் 3ம் இடம். |
| 13 | 02 | செ.கார்த்திகன் | சைவம் 2ம் இடம் தமிழ் 3ம் இடம் |
| 14 | 02 | ஜெ.ஜென்சிகா | கணிதம் கத்தோலிக்கம் 1ம் இடம் சுற்றாடல் 2ம் இடம். |
| 15 | 02 | சு.சுகிதரன் | கணிதம் கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 16 | 02 | வி.விதுசன் | சைவம் 3ம் இடம் |
| 17 | 02 | அ.கெறினா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 18 | 03 | வி.சதுர்ஜனா | தமிழ் த்தோலிக்கம் 1ம் இடம் கணிதம் 2ம் இடம் ஆங்கி 3ம் இடம் |
| 19 | 03 | பி.ஆருஜா | சைவம் சுற்றாடல் 1ம் இடம் தமி ஆங்கிலம் 2ம் இடம் ணிதம் 3ம் இட |
| 20 | 03 | உ.அன்புவிழி | கணிதம் ஆங்கிலம் 1ம் இடம் சைவம் 2ம் இடம் சுற்றாடல் தமிழ் 3ம் இடம் |
| 21 | 03 | த.அபிஷா | கணிதம் சைவம் 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 22 | 03 | கி.கம்ஷா | சுற்றாடல் 2ம் இடம். |
| 23 | 03 | ஜோ.ஆர்த்திகா | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 24 | 03 | எ.மேரிதிபானி | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 25 | 03 | சி.தனுசியா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 26 | 03 | அ.சரோன் அபினா | கிறிஸ்தவம் 2ம் இடம் |
| 27 | 03 | ந.எப்சிபா | கிறிஸ்தவம் 3ம் இடம் |
| 28 | 04 | ம.இனியா | தமிழ் ஆங்கிலம் 1ம் இடம் கணிதம் சுற்றாடல் சைவம் 2ம் இடம் |
| 29 | 04 | அ.வினுஜா | தமிழ் 2ம் இடம் கணிதம் சுற்றாடல் ஆங்கிலம் கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 30 | 04 | செ.நிலானி | சைவம் 1ம் இடம் தமிழ் 3ம் இடம் |
| 31 | 04 | ம.அரணி | கணிதம் சுற்றாடல் சைவம் 3ம் இடம் |
| 32 | 04 | ம.இலக்கியா | ஆங்கிலம் 3ம் இடம் |
| 33 | 04 | அ.ஜெஸ்ரின் | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 34 | 04 | வி.விதுசன் | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 35 | 05 | செ.ரோசியா | தமிழ் ஆங்கிலம் கணிதம் சுற்றாடல் 1ம் இடம் சைவம் 2ம் இடம் |
| 36 | 05 | வி.ரோஜிகா | தமிழ் ஆங்கிலம் கணிதம் சுற்றாடல் 2ம் இடம் சைவம் 1ம் இடம் |
| 37 | 05 | மு.ஆரணி | சைவம் தமிழ் கணிதம் 3ம் இடம் |
| 38 | 05 | வி.சுயாத் | கணிதம் 3ம் இடம் கத்தோலிக்கம் 2ம் இடம். |
| 39 | 05 | அ.யூட்பிரிய தர்சன் | சுற்றாடல் ஆங்கிலம் 3ம் இடம் |
| 40 | 05 | பி.அஸ்வியா | கத்தோலிக்கம் 1ம் இடம் |
| 41 | 05 | இ.மிதுஸ்ஸிகன் | கத்தோலிக்கம் 2ம் இடம் |
| 42 | 05 | அ.மேரிஸீவிதா | கத்தோலிக்கம் 3ம் இடம் |
| 43 | 05 | சி.ஷாணுஜா | கிறிஸ்தவம் 1ம் இடம் |
| 44 | 05 | ச.தர்மிலா | கிறிஸ்தவம் 2ம் இடம் |